பக்கங்கள் நான்கு          விலை ரூபா:- 4-00

# முரசொலி

முரசு 04 ஒலி 286 திங்கள் 26-11-1990 (கார்த்திகை 10) ஐ அவ்வல் 08

★ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அறிக்கை

# பலாலி, காங்கேசன்துறை வீதிகளில் போக்குவரத்தைத் தடை செய்யாதீர்கள்

பலாலி இராணுவ முகாமைச்சூழவுள்ள பகுதிகளில் பாரிய அளவில் யுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். கடல், வான் தாக்குதல்களுக்கு மத்தியில் படையினரை முகாமுக்குள் முடக்கி வைத்திருக்கிறோம். இம்மோதல்களில் எமது போராளிகள் பலர் படுகாயமடைகின்றனர். அவர்களை வான்தாக்குதல்களுக்கு மத்தியில் வாகனங்களில் ஏற்றிவர வேண்டியிருக்கிறது. அதனால் பலாலி வீதியூடாகவும் காங்கேசன்துறை வீதியூடாகவும் விரைவான பயணத்தை மேற்கொள்ளவேண்டியுள்ளது. எனவே இவ்விரண்டு வீதிகளிலும் பயணம் செய்வோர் தற்போதைய போர்க்கால சூழலை புரிந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதையோரங்களில் கூட்டம் கூட்டமாக நிற்பதும் இரண்டு மூன்று சைக்கிள்கள் —04 ஆம் பக்கம் பார்க்க

மாங்குளம் முகாமை கைவிட்ட நிலையில்

# அரசு தோல்வியை ஒப்புக்கொள்கிறது

## படையினருக்குப் பலத்த இழப்பு என்கிறது பாதுகாப்பு அமைச்சு

மாங்குளம் இராணுவ முகாமில் இருந்து இராணுவம் வெளியேறிவிட்டதாகப் பாதுகாப்பு அமைச்சு நேற்று ஒப்புக்கொண்டது.

பலத்த தாக்குதல் முகாம் மீது மேற்கொண்டதைத் தொடர்ந்தே இவ்வாறு படையினர் வெளியேறத் தொடங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது

முகாம் பகுதியில் நடந்த மோதலில் படையினர் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக ஒப்புக்கொண்ட பாதுகாப்பு வட்டாரங்கள், கொல்லப்பட்ட சிப்பாய்களின் எண்ணிக்கை விபரம் ஏதும் இதுவரை பாதுகாப்பு தலைமைச் செயலகத்திற்குக் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தன.

இதனிடையே மாங்குளம் முகாம் பகுதியில் நேற்றும் கடுமையான வான்தாக்குதல் தொடர்ந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. விமானங்கள் முகாமில் இருந்த ராணுவ சனரக —4 ஆம் பக்கம் பார்க்க

## கொமரன்கடவை தாக்குதலில் 8 சிப்பாய்கள் ஸ்தலத்தில் பலி

நேற்று திருமலை மாவட்டம் கோமரன்கடவைப் பகுதியில் ரோந்து சென்ற ராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலை நடாத்தினர். இத்தாக்குதலில் எட்டுச் சிப்பாய்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மூவர் காயமடைந்தனர்.

அநுராதபுரத்தில் கட்டுப்பொத்தஎன்னுமிடத்திலுள்ள ஊர்காவற் படையினரின் —4 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தலில் தோல்வி ஆஸ்பத்திரி மூடப்பட்டது?

தீவுப்பகுதியைச் சேர்ந்த பிரபல இந்து ஆலயம் ஒன்றின் பரிபாலன சபை தேர்தலில் போட்டியிட்டு தோல்வி கண்ட அவ்வூர் அரசினர் வைத்திய சாலை டாக்டர் ஒருவர், ஆத்திரமடைந்து அவ் வைத்திய சாலையை பூட்டிவிட்டாராம். நன்றியில்லாத மக்களுக்குத் தான் ஏன் சேவை செய்ய வேண்டும் என்று சொல்லி வைத்திய சாலை வார்ட்டில் இருந்த சகல நோயாளர்களையும் வீட்டுக்கு அனுப்பியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (66)


## வீடு பார்க்கச் சென்ற பெண் இராணுவத்தால் கைது

திருகோணமலையிலுள்ள தமது வீட்டை பார்வையிட யாழ் நகரிலிருந்து சென்ற மூன்று பிள்ளைகளின் தாயாரான இளம் பெண் ஒருவர் திருகோணமலையில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளளார்.

திருமலை சிவன் கோவிலடியைச் சேர்ந்த திருமதி. நிர்மலா சுந்தரராசா என்ற மேற்படி இளம் பெண் அங்கு நடைபெற்ற கலவரங்களை அடுத்து அகதியாக வெளியேறி தமது குடும்பத்துடன் பண்டத்தரிப்பு பனிப்புலம் கிராமத்தில் உறவினர் வீட்டில் கடந்த நான்கு மாதங்களாக வசித்து வந்தார்

கடந்த வாரம் இவர் தனியாக தமது வீட்டை பார்த்து வருவதற்காக இங்கிருந்து திருகோணமலைக்கு மிகவும் —4 ஆம் பக்கம் பார்க்க

பிறந்த நாள் நூறு காண்க!



'இந்த மண்ணிலே தமிழன் அடிமையாம்'
— எழுதி டாத விதிஇதை மாற்றுதல்
எந்த வாறென ஏங்கிக் கிடந்தநம்
இதய தாகம் தணிக்கும் புயலென
வந்த வேங்கை, மாவீரன் தமிழர்க்கு
வாய்த்த தோர்பெருந் தலைவன்ப்ர
பாகரன்
கந்த வேளருள் பெற்றுப் பிறந்த நாள்
காண்க நூறு; காணுக தாயகம்!

## மலையகத்தில் இராணுவம் இளைஞரை கைது செய்யத் தடை

மலையகத்தில் தோட்டங்களில் உள்ள இளைஞர்களைக் கைது செய்து விசாரிப்பதற்கு இராணுவத்தினருக்குத் தடை விதிக்கபபடடுள்ளதாக பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ன தெரிவித்துள்ளார்.

தோட்டத்தொழிலாளரை விசாரணைசெய்யவோ கைது செய்யவோ பொலிஸாருக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (50

## புதிய உணவு அதிகாரி

யாழ் மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியாக திரு. இன்பஜோதி நித்தியராஜ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பொதுசன தொடர்புகள் அதிகாரியும், செயலக உதவி அரசாங்க அதிபருமான இவர் —4 ஆம் பக்கம் பார்க்க

## போராளிகள் குறித்து வெள்ளை அறிக்கை வேண்டுமாம்

தமிழ் நாட்டில் தமிழ்ப் போராளிகளின் நடமாட்டம் குறித்து தமிழக அரசு வெள்ளை அறிக்கை வெளியிடவேண்டும் என பாரதிய ஜனதாக்கட சித்தலைவர் எல். கே. அத்வானி கேட்டுள்ளார்.

## மானிப்பாய், கோப்பாய், பருத்தித்துறை, நல்லூர், உடுவில்

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் முதற்கட்டமாக மீளளிப்பு

தமிழீழ மீட்பு நிதிக்கு மனமுவந்து பங்களித்தவர்களில் நூறு கடன் பத்திரதாரர்களுக்கான கடன் முதற்கட்டமாக மீளளிப்புச் செய்யப்படவுள்ளதாக விடுதலைப் புலிகள் நிதிப்பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

மாவீரர் நினைவு தினமான நாளை இந்த மீளளிப்பு நடைபெறும். கடன் மீளளிப்பிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் பத்திரதாரர் ஒவ்வொருவரும் தம் கடன் பத்திரத்தையும் அடையாள ஆவணம் ஏதாவது ஒன்றையும், நேற்று அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் மீளளிப்பு நடைபெறும் இடத்தில் அன்றைய தினம் சமுகம் அளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.


தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் பத்திரதாரரின் கடன் பத்திர இலக்கம் பிரதேச வாரியாக பின்வருமாறு: —4 ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் எனக்கூறிய மூவர் புலிகளிடம் அகப்பட்டனர்

கடந்த பத்து நாட்களாக மறவன்புலோப் பகுதியில் புலிக்கொடி பறக்கவிட்டபடி சாளி மோட்டார் சயிக்கிளில் சுற்றித்திரிந்து தாம் புலிகள் எனக் கூறி வந்த மூவர் நேற்றுப் பிடிபட்டனர்.

இம் மூவரும் இப்பகுதியில் அனேகமானோரைப் படம் பிடித்துள்ளதுடன் தாம் புலிகள் என்றும் லீவில் வந்து தமது உறவினர்கள் வீட்டில் வசிப்பதாகவும் கூறிவந்தனர்.

இம்மூவரும் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (71)



# தமிழீழ மாவீரர் நாள்

மாவீரர் கனவை நினைவாக்க
எல்லோரும்
ஒன்று சேருவோம்.

வர்த்தகர் சங்கம்,
பளை.

11140

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 18 — 04 — 1919



மறைவு: 26 — 10 — 1990

### திருமதி கந்தையா மாணிக்கம்

நீ மறைந்து முப்பது நாள்
நீண்டுதான் சென்றாலும்
ஊரில் உள்ளோர் உன் பெயரை
உச்சரிக்க தவறவில்லை
பாரில் உள்ளோர் உன் புகழை
பாட்டாகப் பாடுகையில்
நீ பிரிந்து போனதேனோ?
நீண்ட விழி நின்றதேனோ?
கால மகன் வந்த வேளை
களிப்போடு சென்றவளே - நீ
சென்று இன்று முப்பது நாள்
சிதறி ஓடிச் சென்றாலும்
உன் நினைவு மாறாது
உன் புகழும் மறையாது

பல்லவராயன்கட்டு,
பூநகரி.

மக்கள், மருமக்கள்.

11117

## விண்ணக வாழ்வின் முதல் வருட நினைவு

மலர்வு: 11 - 01 - 1939

உதிர்வு: 26- 11 - 1989



### அமரர் S. A. சேம்பர்குலன்

ஓராண்டு மறைந்ததம்மா எம் தெய்வம் எமைப் பிரிந்து. பாதகர் சதியாலே பாச தீபம் அணைந்து விட்டது. பாரினிலே நாம் பாதை தெரியாமல் தவிக்கின்றோம். ஆளொரு திக்காய் சிதறிக் கிடக்கின்றோம். ஆறுதல் நீயின்றி அவனியில் நாம் கலங்குகின்றோம் இனி எங்கே உமைக் காண்போம். இறைவனில் உமது ஆன்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

பிரதான வீதி,
மாதகல்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்.

11102

மரணித்த மாவீரர்கள்

# மண் மீட்புக்காக சகலவித சுகபோகங்களையும் துறந்தவர்கள்

"தமிழ் ஈழ மண் மீட்புக்காகத் தமது சுகபோகங்கள் அனைத்தையும் மறந்து சுதந்திர வேட்கை கொண்டவர்களாக தமது இரத்தத்தையும் உடலையும், உரமாக்கித் தந்தவர்களே இந்த மாவீரர்கள்.

ஸ்ரீலங்கா அரசின் அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாமல் மரணித்த 2500க்கும் மேற்பட்ட வீர வேங்கைகளுக்கும் மக்கள் உற்சாகமாக இட்பெருவிழாவை எடுப்பதன் மூலம் எமது போராட்டம் மக்கள் போராட்டமாக எழுச்சி கண்டுள்ளது.

இந்த வகையில் கூட்டுறவாளர்களும் தியாக வேங்கைகளின் குடும்பங்களைக் கௌரவித்து கல்வி உதவி, வேலை வாய்ப்புக்களை வழங்கி வருவது எமக்கு மேலும் உற்சாகத்தை அளிக்கிறது.

மேற்கண்டவாறு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் இடம்பெற்ற வலிகாமம் கோட்ட கூட்டுறவாளர்களின் மாவீரர் நாள் கொண்டாட்டத்தில் தமிழ் ஈழ மாவீரர் நாள் செயலக தமிழீழப் பொறுப்பாளர் திரு. தேவர் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

திரு. வை. செந்திநாதன் தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் ம. ஜேசுராசா, ஐ. செல்வராஜா, மயூரன், செல்வி மாலினி, பிரதேசப் பொறுப்பாளர் திரு. ஐயர் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

(66)

## விதவையின் கண்ணீர்

குவைத்தில் வீட்டுப் பணிப் பெண்ணாகக் கடமையாற்றிய விதவைப் பெண்ணொருவர் தனது ஒரு வருட சம்பளத்தையும் தன் எசமானரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் வீடு திரும்பியுள்ளார்.

குவைத்தில் நடைபெற்ற அசம்பாவிதங்களினால் திடீரென வீட்டார் இடம் பெயர்ந்து வேறிடம் சென்றுவிட்டதாகவும் அதன் பின்னர் அவருடைய வீட்டிலேயே சிரமத்தின் மத்தியில் ஒரு மாதம் வரை தங்கி இருந்த பின்பு தானும் தன்னைப் போன்று பாதிக்கப்பட்ட இன்னும் சில பெண்களும் இலங்கை திரும்பியதாகவும் இன்னும் பல விதசிரமங்களுடன் தான்மட்டும் வெறுங் கையோடு வீடு திரும்பியதாக கோப்பாயைச் சேர்ந்த இப்பெண்மணி தெரிவித்தார்.

(23)

## சிறு விளம்பரம்

### சேவை

நல்லூரில் தரமான தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகளை அதிவிரைவாகப் பெறவும்,பாஸ்போட், அடையாள அட்டை புகைப்படங்கள் பிடிக்கவும் கறுப்பு வெள்ளைப் படங்களை 12''X10'' அளவிற்கு பெரிதாக்கவும் நாட வேண்டிய ஸ்தாபனம் சித்ராலயா, இல. 351,கோவில் வீதி, (நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில்) நல்லூர்.

11112

## அனுதாபச் செய்தி

அமரர்

### வேலுப்பிள்ளை நடேசபிள்ளை

(யாழ். மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி)

இக்கால கட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களானது அமரர் திரு. வேலுப்பிள்ளை நடேசபிள்ளை (யாழ். மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி) அவர்களின் ஊக்கத்துடன் நல்ல சேவையாற்றிக் கொண்டிருக்கும் வேளையில் அவரது திடீர் மறைவு கூட்டுறவுச்சங்கங்களுக்கு பெரும் இழப்பாகும் அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

பணிப்பாளர்களும், பணியாளர்களும்,
சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
சுன்னாகம்.

11148

## கோப்பாய் பலாலி பயிற்சி ஆசிரியர்ஒன்றியம்

### தமிழீழ மாவீரர் நாள்

### சிறப்புச் செய்தி

அன்று முதல் இக்கணம் வரை தமிழ் மக்களின் தன்மானத்தை; சுய கௌரவத்தை, புனித மண் மீட்பு யுத்தத்தினால் புனிதப் படுத்திய தியாகங்களின் திருவடிகளுக்கு தலைவணங்கி அஞ்சலி செலுத்துகின்றோம்.

போராட்ட வரலாற்றில் சர்வதேச அளவில் முதன்மை பெற்று தமிழீழத்தில் மண்மீட்புப் பணியில் தங்களது செங்குருதிகளைத் தியாக நெருப்பாக எதிரியின் முழு சாம்ராஜ்ஜியத்தைச் சாம்பலாக்குகின்ற செயற்கரிய சாதனைகள் படைக்கும், விடுதலைப் புலிகளின் தன்னலமற்ற சேவையையும், தளராத மன உறுதியையும் தன்மான உணர்வையும் தாயகப் பற்றையும் பொங்கி எழும் போராட்ட வீரர்களின் துப்பாக்கி முனைகளிலிருந்தும் புறப்படும் ஒவ்வொரு அக்கினி வார்ப்புக்களுக்கும் புத்திஜீவிகளின் நாளாந்த நடவடிக்கைதான் என்ன? மரணத்தோடு மண்ணை மீட்டெடுக்கும் பணிக்குக் கல்விச்சாலைகளும் கலந்து கொண்டால்,... விடிவுகளின் வெளிச்சமே வெளியே போய்விடதே விழி திறக்கும் கல்விச்சாலைகளும் இனி வீறு கொண்ட விடுதலைப் பாசறையே! இணைவோம் தமிழீழ மீட்பு யுத்தத்தில் அடைவோம் தனியீழம்.

-கோப்பாய் பலாலி பயிற்சி ஆசிரியர் ஒன்றியம்
26. 11. 1990

11141

# இதய அஞ்சலி

## அமரர் வேலுப்பிள்ளை நடேசபிள்ளை

(யாழ் மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டதிகாரி)

அமரர் வேலுப்பிள்ளை நடேசபிள்ளை (யாழ் மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டதிகாரி) அவர்களின் எதிர்பாராத மறைவு இக்காலப் பகுதியில் எமது மக்களுக்கும், கூட்டுறவுத் துறைக்கும் ஈடு கொடுக்க முடியாத இழப்பாகும். அன்னாரின் தன்னலமற்ற சேவை என்றும் எமது இதயத்தில் நிலைத்து நிற்கும். அன்னாருக்கு எமது இதய அஞ்சலியைச் செலுத்துவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1990 - 11. 24.

வலி - கிழக்கு தென்பகுதி
பல நோ. கூ சங்கம், நீர்வேலி

11139

### மாவீரர் வாரம்: போர்க்கால சிந்தனை - 6

## பேராண்மை

''காவல் அரண்களில் கண் தூங்கல் போர்க்களத்தே
போதல் புறங்காட்டல் போல்''

— போர்க்குறள்

போர்க்களத்திலே உள்ள பாதுகாப்பரண்களான காவலரண்களில் நிற்கும் போராளிகள் கண் இமைக்காது நின்று எதிரிகளின் நுழைவழிகளை நுட்பமாகக் கவனித்தல் வேண்டும் அவ்வாறு செய்யாராயின் அது போர்க்களத்திலே எதிரிக்குப் புறமுதுகு காட்டி ஒடுதலைப் போன்றதாகிவிடும்.

மண்ணை மீட்கும் போராட்டக் களத்தில் காவலரண்களில் கண் தூங்காது அல்லும் பகலும், எதிரிகளின் படையசைவைக் கண்காணித்து நின்று காவற் தெய்வங்களாகப் போராளிகள் காத்தனர். இல்லையேல் எதிரிகள் ஊடுருவிச் சின்னா பின்னப்படுத்தியிருப்பர். அது புற முதுகுகாட்டிப் பின் வாங்கியதை நிகர்த்திருக்கும்.

''விழித்தகண் வேல் கொண்டெறிய; அழித்திமைப்பின்
ஒட்டன்றோ வன்கணவர்க்கு''

—திருக்குறள்

பகைவர் தம்மீது வேலை எறியும் போது விழித்துப் பார்த்த தம் கண்களை இமைப்பாராயின் வீரர்க்கு அதுவே புறங்கொடுத்து ஓடுவது போன்றதாகும் என்று வள்ளுவர் பழந்தமிழ் வீரனுக்குக் கூறிய பேராண்மை இந்நாளைய வீரனுக்கும் பொருந்துகிறதல்லவா?

— முருகனடியான்

### தமிழகத்திலிருந்து இலங்கைக்கு

# ஆயுதக் கடத்தல் நிகழவில்லை

## ரஞ்சன் கூறுவது பொய்-கலைஞர் மறுப்பு

"தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு ஆயுதங்கள் கடத்தப்படவில்லை. இலங்கை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன இவ்விதம் கூறியிருப்பது பொய்யான குற்றச்சாட்டாகும்'' என்று தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் தி.மு.க செயற்குழுக் கூட்டத்தின் பின் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் ''தமிழ்நாட்டிலிருந்து பெற்றோல், டீசல் இலங்கைக்கு கடத்தப்படவுமில்லை'' என்றும் சொன்னார்.

''தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இல்லை'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''தமிழ்நாட்டில் அமைதி நிலவுகிறது. இங்கு சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து விடவில்லை'' என்றும் அவர் கூறினார்.

## ஹெலிச்சூட்டினால் சிறுவன் மரணம்

ஹெலிக்கொப்டரின் தாக்குதலால் குளியலறைக்குள் ஒளித்துக் கொண்ட புத்தூரைச் சேர்ந்த 12 வயதுச் சிறுவனான செல்வராசா சசிகுமாரன், மார்பூடாகச் சென்ற 'கலிபர்' தாக்குதலால் படுகாயமடைந்து நேற்று முன்தினம் மரணமானார். (32)

## கோப்பாயில் இன்று

கோப்பாய்ப் பகுதியிலுள்ள பல வீதிகளுக்கும் இப்பகுதியிலுள்ள மாவீரர்களை நினைவு கூருமுகமாக அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளன. கோப்பாய் தெற்கு சிற்றூரவையினரின் தியாக வேங்கைகள் வீதி நாடகம் பல இடங்களிலும் நடாத்தப்பட்டுவருகின்றது. பல சிரம்தான வைபவங்களும் மரம் நாட்டு வைபவங்களும் இப்பகுதியிலுள்ள பொது ஸ்தாபனங்களினால் நடாத்தப்பட்டு வருகின்றன.

இன்று இரவு ஏழு மணியளவில் கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய முன்றலில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் முக்கியஸ்தர்கள் கலந்துகொள்ளும் பொதுக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (23)

## கவிதை என்னை நினைக்கையில் 'மூட்' வரும் -- மு. மேத்தா

தமிழகத்தின் மிகச்சிறந்த கவிஞர்களில் ஒருவரும், தமிழீழ விடுதலைக்காகப்போராடுகின்ற விடுதலைப் புலிகள்பால் நேயம் மிகக் கொண்டவருமான கவிஞர் மு. மேத்தாவுக்கு கவிதை எழுதும் 'மூட்' எப்போது வருகிறது? நேற்று முன்தினம் சென்னை வானொலிக்கு அளித்த சிறப்புப்பேட்டியில் அவரே இப்படி அக்கேள்விக்குப் பதிலிறுத்தார்: ''மனம் டஞ்சாகப பறக்கிற சூழ்நிலைகள சில உண்டு. ஆனால் உருக்கொள்ளும் என்று உத்தரவாதம் தரமுடியாது கையை நீட்டியவுடன் விபூதி, குங்குமத்தை வரவழைத்துக் கொடுக்கிற வேலையல்ல இது. என்னைப் பொறுத்தவரை கவிதை எப்போது என்னை நினைத்துக் கொள்கிறதோ அப்போது என்னிடம் வருகிறது. நான் அணைத்துக் கொள்கின்றேன். நான் நினைக்கிற போதெல்லாம் என் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு கவிதை ஓடோடி வந்து விடுவதில்லை. அது என்னைத்தேடி வருகிறபோது - எந்த வரண்ட சூழ்நிலையாலும் அதை வழிமறிக்க முடிவதில்லை''.

## விசேடமாக க. பொ. த. பரீட்சை

வடபகுதியில் விசேட கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையை பெப்ரவரி மாத இறுதியில் நடாத்த முயற்சிகள் எடுக்கப் படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆகஸ்ட் மாதம் வடக்கில் அசாதாரண சூழ்நிலை காரணமாக ஒத்தி வைக்கப்பட்ட உயர்தரப் பரீட்சைக்குப் பதிலாகவே இந்த விசேட பரீட்சை நடாத்தப்படவுள்ளது. (74)

## மானிப்பாயில் இரவு தாக்குதல்

நேற்று முன்தினமிரவு 10 மணியளவில் கடல்வேவு விமானம் (சீ.பிளேன்) மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதிகளை வட்டமிட்டு இடையிடையே வேட்டுக்களைத் தீர்த்துச் சென்றது.

இதன் பின்னர் இப்பகுதியை நோக்கி வந்த ஹெலிக்கொப்டர் ஒன்று நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் பல தடவைகள் சுற்றிச்சுற்றி தாக்குதல் மேற்கொண்டது.(ப-11)


மாவீரர் வாரம் 21-27.11.90 கூட்டுறவாளர்கள்

யாழ் மாவட்டக் கூட்டுறவாளர்
நடாத்தும்
தமிழீழ மாவீரர் நாள்
சிறப்புச் செய்தி

இந்த வாரநாட்கள் கூட்டுறவாளர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க நாட்களாக அமைகின்றன. காரணம் அனைத்துக் கூட்டுறவு நிறுவனங்களும் ஒன்றுபட்டு ஓரணியில் திரண்டு கூட்டுறவுக் கொள்கையுள் ஒன்றான கூட்டுறவுக்குள் கூட்டுறவு எனும் தத்துவத்தை நடைமுறைப்படுத்திக் காட்டியதோடு எமது சேவைகள் எந்த அளவிற்கு மக்கள் மத்தியில் உள்ளது என்பதை தெரியப்படுத்தியதுடன், மாவீரர்களை நன்றி உணர்வுடன் நினைவுகூரி அவர்களின் பாதையிலே எம்மையும், எமது மக்களையும் இணைத்துக் கொள்ளும் வகையில் இயல், இசை, நாடகத்துறை மூலம் எமது கலையுணர்வை வெளிப்படுத்தி மாவீரரின் சுதந்திர தாகத்தை, தன்மான உணர்வை, தளராத மன உறுதியை வெளிப்படுத்தியுள்ளோம். கடந்த எழுபத்தைந்து வருட கூட்டுறவு வரலாறு கண்ட எமது நிறுவனங்கள் இன்று புத்துயிர் பெற்றுள்ளன என்றால் அதுவும் மாவீரர்களின் சாதனைகளில் ஒன்றாகத்தான் அமைகின்றது. எனவேதான் அவர்கள் எமக்காக ஆற்றிய சேவையை நன்றி உணர்வுடன் நினைவுகூர்ந்து அந்த புனிதர்களின் இலட்சியம் நிறைவேற எம்மாலான அனைத்துப் பங்களிப்பையும் செய்வதேயாகும். இதனால் தமிழீழ சுதந்திரம் விரைவில் கிடடும். எமது இழந்த உரிமைகள் மீண்டும் கிடைக்கும். இதனால் இன்பமாய் வாழ்வோம் இதுவே அந்த உத்தமர்களின் கனவாகும். அதை நனவாக்கிட சிந்திப்போம் செயற்படுவோம்.

கூட்டுறவாளர்
வலி—கிழக்கு கோட்டம்

11125

# கடும் மழையின் மத்தியிலும் மாவீரர் தின நிகழ்ச்சிகள்

மாவீரர்தினம் நேற்று 5வது நாளாக எங்கும் கடும் மழையையும் பொருட்படுத்தாது மக்கள் சிறப்பாக கொண்டாடினர்.

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் மாவீரர் தினத்தை முன்னிட்டு பல சொற்பொழிவுகளும், கவிதை அரங்குகளும், பட்டிமன்றமும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

காரைநகர் யாழ்ரன் கல்லூரி திறந்தவெளி அரங்கில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மறைந்த போராளிகளின் பெற்றோர் கௌரவிக்கப்பட்டனர். நினைவுத் தூபிகள் திறப்பு விழாவும் இடம்பெற்றன,

இதே சமயம் இன்றுதலைவர் திரு. பிரபாகரனின் பிறந்த நாளை முன்னிட்டு இராட்சத புகைக்குண்டுகள் விடப்படும்.

யாழ் பல நோ. கூ. சங்கம், நல்லூர் பல நோ. கூ. சங்கம், தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்கங்கள் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டன.

தெல்லிப்பழை பல நோ.கூ. சங்கம் துர்க்கையம்மன் ஆலய முகாமில் தங்கியுள்ள 700 குடும்பங்களுக்கு ஒரு வாரம் நண்பகல் அன்னதானம் வழங்கி வருகிறது.

கிளிநொச்சி, பரந்தன், பூநகரி பகுதிகளிலும் மாவீரர் தினம் சிறப்பாக இடம்பெற்று வருகிறது. கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய சங்கம் தொடர்ந்து 5வது நாளாக இவ்விழாவைச் சிறப்பாக கொண்டாடி வருகிறது.

(ப10, 71, 50, ப31, 22, ப6 66, 70)

## கேரதீவில் ஹெலித் தாக்கு

நேற்று முன்தினம் கேரதீவுப் பகுதியில் இடம்பெற்ற ஹெலித்தாக்குதலால் ப. மகேஷ்வரன் என்பவரின் கடையும், சைக்கிள் ஒன்றும் சேதமடைந்தன. (71)

## சம்பளப்பணம், விமானத்தாக்குதல்

# செஞ்சிலுவைச் சங்கத்துடன் தமிழர் ஆசிரியர் சங்கம் பேச்சு

பாடசாலைகள் மீது இடம்பெறும் விமானத் தாக்குதல்கள், ஆசிரியர்களின் சம்பளம் பணமாக வழங்கப்படுவது என்பன குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தமிழர் ஆசிரியர் சங்கம் பேச்சு நடாத்தியுள்ளது.

பாடசாலைகள் இனம் காணப்பட்டால் விமானத் தாக்குதல் நடாத்தப்படமாட்டாது என அரசு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கு உறுதியளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

புலோலி மெ. மி. த. க. பாடசாலையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக அரசு ஆராய்வதாக உறுதி கூறியதாகவும் இச் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்குத் தேவையான சம்பளத்தைப் பணமாக யாழ் கல்விப் பணிப்பாளரோ அல்லது அவரின் பிரதிநிதியோ கொழும்பில் இருந்து வங்கி மூலம் பெற்றுத்தரின் அதனைப் பாதுகாப்பாக யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வந்து ஒப்படைக்க தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் இச்சந்திப்பின்போது உறுதியளிக்கப்பட்டது.

(ப 17, 32)

# வெளிநாட்டு சிமெந்து கொழும்பில் விற்பனை

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை இயங்காததால் வெளிநாட்டு சிமெந்தை தருவிக்க தனியார் நிறுவனங்கள் சிலவற்றுக்கு அரசு அனுமதியளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது,

கொழும்புத் துறைமுகத்தில் சவூதி ஆரேபியக் கப்பல் சிமெந்து தயாரிக்கும் இயந்திரங்களுடன் தரித்து நின்று, சிமெந்து பொதி பண்ணப்படுகிறது. ஒரு பைக்கற் சிமெந்து கொழும்பில் 195 ரூபாவாக விற்கப்படுகிறது.

(70)

## நீர்வேலியில் இன்று

யாழ் மாவட்ட கூட்டுறவாளர்களால் நடாத்தும் தமிழீழ மாவீரர் நாள் வலி-கிழக்கு கோட்ட நிகழ்வுகள் இன்று காலை 10 00 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ் மாவட்ட ரீதியாக நடைபெற்ற போட்டிகளுக்குரிய பரிசில்கள் வழங்கப்படவுள்ளமையால் யாழ் மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கூட்டுறவு பரிசோதகர்கள், சகல கூட்டுறவுச்சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், சகல தமிழீழ மாவீரர் நாள் சங்கப் பிரதிநிதிகள், ஊழியர்கள், கூட்டுறவாளர்கள் பொதுமக்கள் அனைவரையும் தவறாது கூட்டத்தில் கலந்து சிறப்பிக்குமாறு யாழ் மாவட்ட மாதிரி நிர்வாக செயலக கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுள்ளார்கள். (66)

# நள்ளிரவு மாவீரர் சுடர் ஏற்ற விடுதலைப்புலிகள் கோரிக்கை

மாவீரர்வாரமாகக் கொண்டாடும் இவ்வாரத்தில் இன்று நள்ளிரவு 12மணி 01 நிமிடத்திற்கு தமிழீழத்திலுள்ள ஆலயங்கள், பாடசாலைகள், நிறுவனங்களில் பாரிய மணிகள் 2 நிமிடங்களிற்கு அசைந்து ஒலி எழுப்பும்.

அந்நேரத்தில் அனைத்து மக்களும் தங்களிடத்தில் எழுந்து நின்று இரண்டு நிமிடம் அஞ்சலி செய்யவும்.

இந்த அஞ்சலி நிகழ்வு முடிந்ததும் 12.03ற்கு மாவீரர் சுடர் ஏற்றும் நிகழ்ச்சி ஆரம்பமாகும். மாவீரர் நினைவாக இந்நேரத்தில்உங்கள் வீடுகளில் தீப்பந்தங்கள், சிட்டி விளக்குகள், குத்துவிளக்குகளில் அலங்கரித்து சுடரேற்றி நினைவு கூருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அனைத்துத் தமிழ் மக்களையும் கேட்டுக்கொள்கின்றது. (71)

# கிழக்கு பல்கலைக்கழகத்தில் 25 வீத மாணவர்கள் வரவு

மட்டக்களப்பு பல்கலைக் கழகம் கடந்த 19 ஆம் திகதி ஆரம்பமானபோது 25 வீதமான மாணவர்களே சமுகமளித்தனர்.

இங்குள்ள 500 மாணவர்களில் 250 மாணவர்கள் முஸ்லிம்களாவர். இவர்கள் தற்போது தும்பறை பல்கலைக் கழகத்தில் பயிலுகின்றனர். மிகுதி 250 தமிழ் மாணவர்களில் 65 பேரே வகுப்புகளுக்கு வந்திருந்தனர்.

(50)

## விஷமச் செயல்

மாவீரர் தினத்தை முன்னிட்டு புனரமைப்புச் செய்து வர்ணந்தீட்டப்பட்ட கலைநகர் வீதிக்குரிய விளம்பரப் பலகையை இரவோடு இரவாகக் களவாடிய இழிசெயல் குறித்து பொதுமக்கள் கவலையும் கண்டனமும் தெரிவித்துள்ளனர்.

சுமார் 30 வருடங்களாகக் கலைநகர் வீதிக்கு நாட்டப்பட்டிருந்த ''கலைநகர் வீதி'' என்ற விளம்பரப்பலகையை விஷமிகள் சிலர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு களவாடிய இழிசெயலையே பொதுமக்கள் கண்டித்துள்ளனர். (12)

# வல்வை வைத்தியசாலையில் பல நோயாளிகள் அவதி

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் நோயாளிகளுக்குக் குறிப்பாகத் தொய்வு, நீரிழிவு, இருதய நோய் போன்றவற்றிற்கு உரிய மருந்து வகையில்லாமல் நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

அகதிகளின் தொகை வல்வெட்டித்துறைப் பகுதியில் கூடுதலாகி வருவதனால் இவ் வைத்திய சாலையில் மருநது வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையைப் போக்க வடபகுதி சுகாதாரப் பகுதியினர் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பல அமைப்புக்களும் சிற்றூரவையும் கோருகிறது. (22)

## மிதிவெடி சிப்பாய் காலிழப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள செங்கலடி இராணுவ முகாமில் இருந்து வந்தாறு மூலைப்பகுதிக்கு ரோந்து சென்ற இராணுவத்தினர் விடுதலைப்புலிகளின் மிதிவெடியில் சிக்கிக்கொண்டனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச் சம்பவத்தில் ஒரு இராணுவ வீரர் காலை இழந்தார். (71)

### அரசு...

வாகனங்களை இலக்கு வைத்துத் தாக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாங்குளம் ராணுவ முகாம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்ததை நேற்று சகல வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனங்களும் தமது செய்தியறிக்கையில் தெரிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### பல்லாண்டு வாழ ஒரு கவிஞனின் வாழ்த்து

நீ விடுதலையை
இசைத்த
முதல் குயில்
நீ பாடிய
பூபாளம் தான்
இன்றைய நிலைக்கு
முதலடி
தனிமரம்
தோப்பாகாது என்பர்
-ஆனால்
பெரும் தோப்பே
தனிமரமாய்
உள்ள அதிசயம்
உன்னில்தான்
கண்டதுண்டு
உனது
பிறந்த நாள் தான்
தமிழீழப் புரட்சியின்
பிறந்த நாள்
ஆகவே
இந்த நாளில் - நீ
பல்லாண்டு வாழ
வாழ்த்துகின்றேன்

— வருடம்தோறும்
வாழ்த்தும்

கவிஞன்

11143

### கொமரன்கடவை...

முகாம் ஒன்று தாக்கப்பட்டதாகவும், இதில் மூன்று ராணுவச் சிப்பாய்களும், இரண்டு ஊர்காவற் படையினரும் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

### வீடு..

சிரமப்பட்டுச் சென்றார் என்றும், ஆங்கு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் தற்போது இங்கு தகவல் கிடைத்துள்ளது. (13)

### பலாலி...

கூட்டமாக பாதையின் குறுக்கே செல்வதும், அவதானமின்றி வீதியைப்பயன்படுத்துவதும், பாதையோரங்களிலும் சந்திகளிலும், சந்தை கூடும் இடங்களிலும் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக நிற்பதும் சைக்கிள்களை நிறுத்துவதும் எமது விரைவான வாகனப்பயணத்துக்கு இடையூறு செய்கிறது. இதனால் சில வேளைகளில் விபத்துக்கள் ஏற்பட்டு இழப்புக்களையும் சந்திக்க வேண்டியுள்ளது. இவ்வாறு அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (71)

### புதிய...

இக் கடமைகளுடன் உதவி மோட்டார் கட்டுப்பாட்டு ஆணையாளராகவும் கடமையாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (66)

யாழ் மாவட்ட கூட்டுறவாளர் நடாத்தும்

# தமிழீழ மாவீரர் நாள் மாவட்டப் போட்டி முடிவுகள்

மாவட்டப் போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

பேச்சுப் போட்டி:

1-ம்இடம்: செல்வி சு. நிலாந்தி கொடிகாமம் பல. நோ. கூ. சங்கம், 2-ம் இடம்: செல்வி செ. தயாளினி அளவெட்டி மல்லாகம் பல.நோ.கூ. சங்கம், 3-ம் இடம்: செல்வி வ. மதிவதனா நல்லூர் பல. நோ.கூ' சங்கம்.

குழுப்பாடல் போட்டி:

1-ம் இடம்: சாவகச்சேரி பல. நோ. கூ. சங்கம், 2-ம் இடம் அரியாலை தெ. ப. பொ. உ: வி. கூ. சங்கம், 3-ம் இடம்: அச்சுவேலி தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்.

வினாடிவினா போட்டி:

1-ம் இடம்: கி. புவனேந்திரம் கட்டைவேலி/நெல்லியடி பல' நோ. கூ. சங்கம், 2-ம் இடம்: கு. சுந்தரச்செல்வன் அச்சுவேலி தெ.ப.பொ. உ. வி கூ. சங்கம், 3-ம் இடம்: ச. சத்தியசீலன் யாழ்ப்பாணம் பல. நோ. கூ. சங்கம்.

நாடகப் போட்டி:

1-ம் இடம், ''இரட்டை முகங்கள்'' தெல்லிப்பழைபல.நோ' கூ.சங்கம், 2-ம் இடம்: ''யமலோகத்தில் தமிழீழம்'' பண்டத்தரிப்பு பல. நோ. கூ. சங்கம், 3-ம் இடம்: ''மண்ணிலே மடிந்தவர்கள்' யாழ்மாவட்ட சி. க.கூ. ச. சமா'சம். (66

## தமிழீழ மீட்பு நிதிக்கடன்...

### மானிப்பாய் கடன்பத்திர இலக்கங்கள்

132. 136, 139, 140, 245, 264, 344, 375, 473, 492, 580, 723, 752, 912, 916, 1006, 6126, 7069, 7309, 7650, 18662.

### கோப்பாய் கடன்பத்திர இலக்கங்கள்

17, 41. 65, 1114, 1129, 1178, 1255, 1397, 1455. 1471, 1578, 1584, 1648, 18526, 8534, 9040, 9362, 9460, 9947, 14143, 14606, 14615, 14742, 15132, 5212, 15584, 18288, 18296.

### பருத்தித்துறை கடன்பத்திர இலக்கங்கள்

20001, 20013, 20045, 20071, 20116, 20181, 20230, 20284, 20301, 20362, 20442, 20542, 20816, 21156.

### நல்லூர் கடன்பத்திர இலக்கங்கள்

3253, 3374, 3402, 3405, 3525, 3643, 10281, 10536, 10577, 11358, 11603, 12164, 12253, 12401, 12470, 12545, 12622, 12653, 12814, 12852, 13028, 13286

### உடுவில் கடன்பத்திர இலக்கங்கள்

2090, 2126, 2211, 2240, 2299, 2313, 2436, 2760, 2927, 2941, 2987, 4724, 4941, 4995, 5105.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 26.11-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.